## பழவகை அபிவிருத்திச் சபையின்

### 1. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2002 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயற்பாடுகள்

2001 ஆம் ஆண்டின் பின்னர் சபையின் நடவடிக்கைகள் செயற்பாடற்று இருந்ததுடன், அதற்குரிய பதவியணியினரும் கட்டுப்பாட்டு சபையும் இருக்கவில்லை. மேலும், சபையின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கோ அல்லது சபையைக் கலைப்பதற்கோ அமைச்சு நடவடிக்கை எடுத்தது பற்றிய சான்றுகள் காணப்படாததுடன், சபையை தாபித்தலுக்குரிய அதிகாரச்சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 ணக்குகள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல்

மீளாய்வாண்டிற்குரிய கணக்குகள் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் என்பன பராமரிக்கப்பட்டிருந்தமைக்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்களின் பாதுகாப்பு

அதிகாரசபையினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2001 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் கீழே காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பரீட்சிப்பதற்குரித்தாக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றின் நிலைத்திருதன்மை மற்றும் சரியானதன்மை தொடர்பாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

| சொத்துக்கள் | ரூபா | பொறுப்புக்கள் | ரூபா |
|---|---|---|---|
| நிலையான வைப்புக்கள் | 5,480,400 | செலுத்த வேண்டிய வங்கி வட்டிக்கான வரி | 73,654 |
| கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி | 736,545 | அட்டுறு செலவினம் | 500 |
| வங்கி மீதி | 975,449 | | |

## 2.4 நிதிய முதலீடு

அரசாங்க வங்கியொன்றில் 2 நிலையான வைப்புக் கணக்குகளில் ரூபா. 5,084,719 தொகையொன்று சபையினால் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் வருடாந்த வட்டி சபையின் நடைமுறைக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு வந்தது, மீளாய்வாண்டின் இறுதியில் அந்நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ரூபா 7,095,081 மீதியை வினைத்திறனான முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.